பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
23 04 2024 6 45
செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 89 தொகுதிகளில் அரசியல் தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.
- குடியுரிமை திருத்தச் சட்டம் திரும்பப் பெறப்படும் என காங்கிரஸ் கட்சி தெரிவித்திருப்பதற்கு பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா கண்டனம் தெரிவித்துள்ளார்.
- நடைபெறும் மக்களவைத் தேர்தல் மத்தியில் ஆட்சியமைப்பதற்கான தேர்தல் மட்டுமல்ல நாட்டைக் காப்பாற்றக்கூடியது என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.
- மதுரை சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் இன்று காலை கோலாகலமாக நடைபெற்றது.
- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

*----- இனி விரிவான செய்திகள் ----*

*<<<<>>>>*

மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 89 தொகுதிகளில் நாளையுடன் பிரச்சாரம் முடிவுக்கு வர இருப்பதால் அரசியல் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அடங்கிய இந்த தொகுதிகளில் வரும் 26ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் **Akola,** அமராவதி உள்ளிட்ட தொகுதிகளில் பிஜேபி மூத்த தலைவரும் உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா அக்கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார்.

இதனிடையே அவர், வெளியிட்டுள்ள அறிக்கையில், குடியுரிமை திருத்தச் சட்டம் தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ப. சிதம்பரம் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

சாமானிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய இந்தச் சட்டம் திரும்பப் பெறப்படும் என்று திரு. சிதம்பரம் கூறியிருப்பது வேடிக்கையானது என திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தமது சமூக வலைதளப் பதிவில், இந்தத் தேர்தல் ஆட்சியமைப்பதற்கான தேர்தல் மட்டுமல்ல நாட்டைக் காப்பாற்றக்கூடிய, அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாக்கக்கூடிய தேர்தல் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே மக்களவைத் தேர்தலுக்கான மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 94 தொகுதிகளின் வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான காலக்கெடு நேற்றுடன் நிறைவடைந்தது.

அடுத்த மாதம் ஏழாம் தேதி மூன்றாம் கட்டத் தேர்தல் நடைபெற உள்ளது.

இந்தநிலையில் மக்களவைத் தேர்தலுக்கான எஞ்சியகட்ட வாக்குப்பதிவின்போது கோடை வெயிலின் தாக்கம் குறித்து உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென சிறப்பு பணிக்குழு ஒன்றை தேர்தல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது.

புதுதில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் தலைமையில் நேற்று நடைபெற்ற ஆய்வின்போது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

<<<<>>>>

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு பத்ம விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நேற்று வழங்கி கௌரவித்தார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் குடியரசு துணைத்தலைவர் திரு. வெங்கைய நாயுடு, பரதநாட்டியக் கலைஞர் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் ஆகியோருக்கு பத்ம விபூஷன் விருதுகளை அவர் வழங்கினார்.

மறைந்த சமூக கல்வியாளர் **Bindeshwar Pathak-**கிற்கு பத்ம விபூஷன் விருது, மறைவுக்கு பிந்தைய விருதாக வழங்கப்பட்டது.

நடிகர் மிதுன் சக்ரபர்த்தி, பிரபல பின்னணிப் பாடகி திருமதி உஷா உதுப், சமூக செயற்பாட்டாளர் டாக்டர் சீதாராம் ஜிண்டால், இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் தேஜாஸ் மதுசூதன் பட்டேல், முன்னாள் உத்தரப்பிரதேச ஆளுநர் திரு. ராம்நாயக் ஆகியோருக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.

தமிழ் திரைப்பட நடிகரும், தேமுதிக நிறுவனருமான விஜயகாந்துக்கு பத்ம பூஷன் விருது மறைவுக்கு பிந்தைய விருதாக வழங்கப்பட்டது.

<<<<>>>>

மதுரை சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் இன்று காலை கோலாகலமாக நடைபெற்றது.

லட்சக்கணக்கானோர் பங்கேற்று கோவிந்தா முழக்கத்துடன் சுவாமி தரிசம் செய்தனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் கூடுதல் தகவல்களை கேட்கலாம்.

<<<<>>>>

கோடை விடுமுறையில் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகளை நடத்தக்கூடாது என பள்ளிக் கல்வித்துறை அறிவுறுத்தியுள்ளது.

பொதுத் தேர்வுகள் இன்றுடன் நிறைவடைய உள்ள நிலையில் கோடை விடுமுறை தொடங்குவதால் சிறப்பு வகுப்புகள் நடத்துவதற்கு சில பள்ளிகள் திட்டமிட்டிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து பள்ளிக் கல்வித்துறை சுற்றிக்கையை வெளியிட்டுள்ளது.

சிறப்பு வகுப்புகளுக்கு மாணவர்களை வரச்சொல்வதால் அவர்களுக்கு உளவியல் ரீதியாக பாதிப்புகள் ஏற்படுவதாக புகார்கள் வந்துள்ளதால் விடுமுறை நாட்களில் அதுபோன்ற வகுப்புகளை நடத்தக்கூடாது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணைப் பகுதியில் வாகனங்களை நிறுத்துவது தொடர்பான வழக்கில் இந்திய கணக்கெடுப்பு அமைப்பு அளித்துள்ள அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

அணைப் பகுதியில் மிகப்பெரிய வாகன நிறுத்த மையம் அமைக்க கேரள வனத்துறை முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணையின்போது வாகன நிறுத்த மையம் அமைக்கும் பகுதி தமிழக அரசுக்கு குத்தகைக்கு விடப்பட்ட இடத்தில் இல்லை என இந்திய கணக்கெடுப்பு அமைப்பு தெரிவித்திருந்தது.

ஆனால் அந்த அமைப்பின் அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என தமிழக அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பதிலளிக்குமாறு கேரள அரசுக்கு நான்கு வார அவகாசம் வழங்கிய நீதிபதிகள், விசாரணையை ஜூலை 10ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

<<<<>>>>

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்ட வழக்கில் வங்கி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கில் இருந்து விடுவிக்கக்கோரி செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வழக்கில் மீண்டும் வாதிட அனுமதிக்கக் கோரி செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி, அதற்கு அனுமதி வழங்கி இருந்தார்.

வங்கி ஆவணங்களில் மாற்றம் இருப்பதால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை வழங்க வேண்டும் எனக் கோரி இருந்த நிலையில், செந்தில் பாலாஜி நேற்று அவற்றைப் பெற்றுக்கொண்டார்.

<<<<>>>>

நாட்டின் கிழக்குப் பகுதி உட்பட பல்வேறு மாநிலங்களிலும் அடுத்த நான்கு நாட்களுக்கு வெப்ப அலைகள் வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கர்நாடகத்தின் உட்பகுதிகள், ஒடிசா, உத்தரப்பிரதேசம், பீகார், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் அனல் காற்றின் தாக்கம் அதிகரிக்கும் என்றும், 42 முதல் 45 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவாகும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தமிழகத்தின் உள் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

கடலோரப் பகுதிகள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வெப்பத்தின் தாக்கம் இயல்பைவிட 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

வட தமிழக உள் மாவட்டங்களின் ஒருசில இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வரும் 24 மணி நேரத்தில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை 38 டிகிரி செல்சியசாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியசாகவும் இருக்கும் என்றும் வானிலை மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தைவான் நாட்டில் நேற்றிரவு அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6 புள்ளி ஒன்றாக பதிவானது.

<<<<>>>>

இஸ்ரேல் நாட்டின் ராணுவ உளவுத்துறை தலைவர் மேஜர் ஜெனரல் **Aharon Haliva** தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

<<<<>>>>

வடகொரியா பல்வேறு சிறய ரக ஏவுகணைகளை ஏவி சோதனையில் ஈடுபட்டதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

<<<<>>>>

எல்லைப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மணிப்பூர் மக்களவைத் தொகுதியில் 11 வாக்குச்சாவடிகளில் நேற்று மறுவாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று முடிந்தது.

<<<<>>>>

அருணாச்சலப்பிரதேசத்தில் கடந்த 19ஆம் தேதி நடைபெற்ற வாக்குப்பதிவின்போது வன்முறை நிகழ்ந்த 8 வாக்குச்சாவடிகளில் நாளை மறுவாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் 24 ஆயிரம் ஆசிரியர் பணி நியமனங்களை ரத்து செய்து கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

கரூர் மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் ஷெட்யூல்டு வகுப்பு மாணவர்களுக்கான தொழில், வேலைவாய்ப்பு அதிகம் உள்ள படிப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்கள் குறித்த வழிகாட்டுதல் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

ஜெய்ப்பூரில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 179 ரன் எடுத்தது.

அந்த அணியின் திலக் வர்மா அதிகபட்சமாக 65 ரன் எடுத்தார். **Nehal Wadhera** 49 ரன் சேர்த்தார்.

180 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் அணி, ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து 183 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

யஷஷ்வி ஜெய்ஸ்வால் 104 ரன் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை – லக்னோ அணிகள் மோதுகின்றன.

சென்னையில் இப்போட்டி இரவு ஏழரை மணிக்கு தொடங்கும்.

<<<<>>>>